**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.27 |
| Name | : | மஞ்சுளா |
| Husband Name | : | வேலு |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 45/2025 |

**தேதி : 03.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை தெரியும். எதிரி பக்கத்து வீட்டுக்காரர், ஒரே தெருவில் வசித்து வருகிறோம். எனக்கு ஏற்கெனவே லோன் வாங்கி கொடுத்த வகையில் எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி என்னிடம் அவருடைய குடும்ப செலவிற்காக பணம் தேவைப்படுவதாக என்னிடம் பணம் கேட்டார். லோன்வாங்கி கொடுத்தால் அதற்கான தவணை தொகைகளை அவரே கட்டிவிடுவதாக சொன்னார். அதனால் நான் துறையூரிலுள்ள ஆசிர்வாத் என்ற தனியார் நிறுவனத்தில் கடன் ரூ.30,000/-ஐ பெற்று வசந்தியிடம் ரொக்கமாக பணம் கொடுத்தேன். அதில் அவர் ரூ.20,000/- ஐ கட்டிவிட்டார். ரூபாய் பத்தாயிரம் கட்ட வேண்டும்.அதுஇல்லாமல் செட்டிக்குளத்திலுள்ள யூனியன் பேங்கில் மாட்டு லோன் வாங்கியதில் நான் ஜாமீன்தாராக கையெழுத்து போட்டேன். அந்த பேங்கிலிருந்து எனக்கு நோட்டீஸ் கொடுத்துள்ளார்கள். அவர் அந்த கடன் தொகையின் தவணைகளை கட்டிவிடுவதாக சொன்னதை நம்பி

கடன் வாங்கிகொடுத்தேன். ஊரில் விசாரித்தபோது எதிரி வசந்தி நிறைய பேரிடம் கடன் வாங்கிகொண்டு பணம் கட்டாமல் தலைமறைவாகிவிட்டதாக சொன்னார்கள். சத்தியா என்பவர் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலை் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள். வசந்திக்கு வாங்கிகொடுத்த கடனுக்கான தவணை தொகைகளை தற்போது நான்தான் கட்டி வருகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தைதான் போலீஸார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலீஸார் என்னை விசாரித்தபோது ஆசிர்வாத் நிறுவனத்தில்தான் பணம் வாங்கி கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் கடன் வாங்கிகொடுத்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது குறித்து போலீஸ் என்னிடம் கேட்கவில்லை. எதிரி எனக்கு பக்கத்து வீடு, பழக்கம் என்றால் சரிதான். எதிரி ரூபாய் பத்தாயிரம்தான் தரவேண்டும் என்றால் சரிதான். எதிரிக்கு ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் இல்லை. எல்லோரும் சேர்ந்து அவரை முற்றுகையிட்டதால் அவரால் தவணைகளை சரிவர செலுத்தமுடியவில்லை என்றால் சரியல்ல. வசந்தி என்னிடம் வாங்கிய பணத்தை கட்ட முடியாது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு சேர வேண்டிய பணத்தை எதிரி தந்துவிடுவார் என்றால் கொடுத்தால் வாங்கிகொள்ளுகிறேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.

Judicial Magistrate No.1
Perambalur.